உ

கடவுள் துணை.

வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி ௫. } பிரமாதீச௵ புரட்டாசி௴ { பகுதி ௬.

விருந்தோம்பல்.

விருந்தோம்பலென்னும் இப்பேரறமானது இல்லறத்தார்கட்கு இன்றியமையாத தருமங்களுள் மிகவும் சிறந்ததாக நம்முன்னோர்களாற் கொள்ளப்பட்டுத் தொன்று தொட்டு இன்றுவரை வேதாகம வழிப்பட்ட நம்மவராற் போற்றப்பெற்று நம்மவர்க்கே அதிக உரிமையுடையதாகி வருவதேயாயினும் நம்மவரிற் பல்லோர் இதன் உண்மை நிலையை ஆராய்ந்தறிந்து நடத்துகின்றாரில்லை. விருந்து வந்திருக்கிறது என்றால் தமதுபந்துக்கள் வந்திருப்பதாகவே கொள்ளுகின்றார்கள். தமது குலத்துத் தந்தைவர்க்கத்திலேனும் தாய்வர்க்கத்தேனும் பிறந்து சுற்றத்தாரானவர்கள் வந்தபோது அவர்களையுபசரிப்பதே விருந்து போற்றுவதாகக் கருதுகின்றார் பல்லோர். உண்மையில் இவர்கள் விருந்தினரல்லர். இவர்கள் சுற்றத்தார் என்றே கூறப்படுவர்.

"தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை" என்புழி ஒக்கல் எனக் கூறப்பட்டவரே இச்சுற்றத்தாராவர். இத்திருக்குறளில் விருந்து ஒக்கல் எனக் கூறுவதால் விருந்தினர் வேறு, சுற்றத்தார் வேறு என்பது வெளியாம். அன்றியும் "விருந்தோம்பல்" என ஓரதிகாரமும், "சுற்றந்தழால்" என ஓரதிகாரமும் தேவர் வகுத்த கருத்தும் நோக்கத்தகும். ஆகவே விருந்து எனப்படுவோர் சுற்றத்தாரின் வேறென்பது பெறப்பட்டது. அவர் யாவரெனிற் கூறுதும்.

விருந்தினர்:—விருந்து எனற்குப் புதுமை யென்பது பொருள். ஆகுபெயராய் விருந்தினராகிய புதியரை யுணர்த்தும். ஒத்தகுலத்தினராயினும் வேறுகுலத்தினராயினும்விருந்தினராதற்கிழுக்கில்லை. இவர் பண்டு அறிவுண்மையிற் குறித்து வந்தோரும், அஃதின்மையிற் குறியாது வந்தோருமென இருதிறப்படுவர். பண்டே கண்டு பழகியவரும், முற்பழக்கமின்றி அப்போது வந்து கண்டுகொண்டவருமாகிய இந்த இருவகையவர்களே விருந்தினரெனப்படுவர். இங்ஙனம் வரும் விருந்தினரைப் பாதுகாத்தலே இல்லறத்தார்கட்கு முக்கிய கடமையென நூல்கள் சிறப்பித்துக் கூறும். தம்மோடு தொடர்புடைய சுற்றத்தாரைப் பார்த்து உபசரித்தலானது தமக்கு அவர் செய்த செய்கிற உபசாரத்திற்குப் பிரதியான உபசாரமேயாதலின் கடன் செலுத்தலேயொக்கும். சம்பந்தமற்ற விருந்தினரை யுபசரித்தல் அறச் செயலேயாகும். சுற்றத்தாரினும் விருந்தினர் சிறப்பெய்துகின்றமையை யுணர்த்தவே 'விருந்து ஒக்கல்" என ஒக்கலுக்கு முன்னர் விருந்தை வைத்தருளினர் தேவரும். அன்றி "தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான்" என வகுத்த ஐந்துவகையாருள்ளும் தென்புலத்தார் தெய்வம் என்ற முன்னிருவரும் கட்புலனாகாமையானும், ஒக்கல் தான் என்ற பின் இருவரும் தம்மில் வேறாகாமையானும் நடுநின்ற விருந்து மிகச் சிறந்ததென்று கொண்ட பரிமேலழகர் கருத்தும் நோக்கத்தக்கதேயாகும். இன்னும் வேதமோதலாகிய பிரமயாகமும், வேள்வி செய்தலாகிய தேவயாகமும், விருந்து போற்றலாகிய மானுட யாகமும், நீர்க்கடனீதலாகிய பிதிர்யாகமும், பலியீதலாகிய பூதயாகமும் என இல்லறத்தார்க்கு விதிக்கப்பட்ட ஐந்துவகை யாகங்களுள்ளும் நடுநிற்கும் சிறப்புற்றது மானுட யாகமென்னும் விருந்தோம்பலேயாதலும் நன்கு கவனிக்கற்பாற்று.

விருந்தோம்பு முறை:—விருந்தினர் வரவைத் தூரத்தே கண்டபோது மனத்தின்கண் மகிழ்ச்சி யெய்தி அம்மகிழ்ச்சி வெளிப்படுமாறு முகமலர்ச்சி காட்டலும், அதுகண்டு அவர் சமீபித்தபோது 'வருக வருக' என இன்சொற் கூறலும், அது கேட்டு உற்றபொழுது இருக்கையும் உண்டியும் முதலியன தருதலாகிய நன்றாற்றலும் என முறையே வரவர விருந்தினர் மனம் மகிழ்வெய்துமாறு செய்யலே

ண்டும். இங்ஙனம் செய்யாது சேய்மைக்கண்ணே விருந்தினரைக் கண்டவுடன் சோற்றுக்குச் சனியனாக யாரோ வருகிறானே யென்று நினைத்துச் சற்றே கடுகடுத்து நோக்கினால் அக்கொடு நோக்கமாகிய தீச்சுடப்பொறாது விருந்தினர் முகங்கருகி அகல்வர். இதனாற்றான்.

> "மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
> நோக்கக் குழையும் விருந்து" என்றார் தேவர்.

சாதனம்:—இங்ஙனமாக விருந்தினரை யுபசரித்தற்கு இன்றியமையாத சிறந்த சாதனங்கள் அன்புடைமையும் இன்சொல்லுமே யாம். ஒருவர் அன்புடையவரேயாயினும் நல்வார்த்தைகூறி யுபசரியாராயின் அவரன்பை யறிதல் கூடாமை பெறப்படும். இனியவார்த்தை பட்டும்பேசி அன்பிலாராய வழி வாசாகைங்கர்யமாவதல்லது பயன் காண்டலமையாது. ஆதலின் விருந்தோம்புவார்க்கு அன்பும் இன்சொல்லும் அவசியம் வேண்டப்படுவனவேயாம். இதனை விருந்தோம்பலுக்குமுன்னர் அன்புடைமையையும், பின்னர் இனியவை கூறலையும் முறைவைப்பாக அமைத்த பொய்யில் புலவர் கருத்து நன்கு வலியுறுத்துமாறறிக. பொருட்பெருக்க முடையார் டம்ப விர்த்தியினராகிப் பல்வகைக்கறி பதார்த்த பலகார பாயசங்களுடன் நல்லுணா அடுவித்துப் பரிகல நிறையப் பரிமாறி அன்பும் இன்சொல்லுமின்றி யுண்பிப்பதினும், பொருளில்லார் அன்பும் இன்சொல்லுமுடையராகி உப்பின்றட்ட புற்கை யூணிடினும் அதுவே விருந்தினர்க்கு அமுதினுமினியதாகிப் பெருமகிழ்ச்சி விளைக்கும். இப்பெற்றியை யின்றும் அனுபவத்தால் அறியலாம்.

கடமை:—இங்ஙனமாக விருந்தோம்புங் கடமை யார்க்கு உரியதோ என்னின் நாயகனுக்கும் மனைவிக்கும் உரியதாயினும் நாயகன் ஏவுதற் கர்த்தாவும் நாயகி இயற்றுதற் கர்த்தாவும் ஆதலால் நாயகனைப் பார்க்கினும் நாயகிக்கே அதிகமாகும். பெண்களுக்குரிய நற்குணங்கள் பலவற்றுள்ளும் சிறந்தது விருந்து போற்றலாம். நாயகன் எவ்வளவுதான் அன்புற்றிருப்பினும் விருந்து வந்திருக்கிறது என்றவுடன் எனக்குத் தலை வலிக்கிறது என்று வெடு வெடுத்துப் பேசிச் சட்டிபானைகளையுடைக்கும் சண்டிக் கழுதைகள் பெண்டிராக வந்திருந்தால் நாயகன் எண்ணம் சிறிதும் நிறைவேறாதொழியும்.

"மெல்லியல் நல்லாளும் நல்லள் விருந்தோம்பிச்
சொல்லெதிர் சொல்லாள் எனின்" என்ற பெரியார் வாக்கை இவண் கவனித்தல் தகும். 'கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி' என்றவாறு விருந்தினரை யுபசரிக்க நாயகன் கருதுமுன் குறிப்பாலுணர்ந்து வேண்டுவன செய்பவளே மனைவியாவாள். அத்தகைய நற்குணம் நிறைந்த புண்ணியவதியை வாழ்க்கைத் துணையாகப் பெற்றவனே பாக்கியசாலியாவான்.

சீதாபிராட்டி இராமபிரானைப் பிரிந்து துயருற்றிருக்குங் காலையில் தன் நாயகனைப்பற்றிச் சிந்திக்கும்போது அப்பிராட்டி நிலையைக் கூறவந்த கம்ப நாடர் "விருந்து வந்தபோ தென்னுறு மோவென விம்மும்" என்றார். இதனால் சீதாபிராட்டி விருந்தினரைப் பாதுகாக்கும் விஷயத்தில் எவ்வளவு பிரீதியுடையராயிருந்தனரென்பது தெளிவாம். இளையான்குடி மாறநாயனார் ஒருநாள் மழைபொழியும் நள்ளிராவில் விருந்தினரைக்கண்டு தம் நாயகியாரிடஞ்சென்று கூறியதும், அம்மையார் நாயகருக்குக் கூறியதும் ஆகிய செய்யுட்களை இதனடியிற் காட்டுவாம்.

நமக்கு முன்பிங் குணவிலை யாயினும்
இமக்கு லக்கொடி பாகற் கினியவர்
தமக்கு நாமின் னடிசில் தகவுற
அமைக்கு மாறெங்ங னேயணங் கேயென.

மாது கூறுவண் மற்றொன் றுங் காண்கிலேன்
ஏதி லாரு மினித்தரு வாரிலை
போது வைக்கிற்றுப் போமிடம் வேறிலை
தீது செய்வினை யேற்கென் செயலென்று.

செல்லல் நீங்கப் பகல்வித் தியசெந்நெல்
மல்லல் நீர்முளை வாரிக் கொடுவந்தால்
வல்ல வாறமு தாக்கலு மாகுமற்
றல்ல தொன்றறி யேனென் றயர்வுற.

அந்நனமே நாயனார் வயலிற் சென்று முளைவாரிவந்து கொடுக்கவாங்கி வறுத்துக் குற்றி அரிசியாக்கி அமுதாக்கிப் பிறவும் இவ்வாறே அரிதிற் செய்து விருந்து போற்றி நித்தியானந்தப் பெரு

வாழ்வெய்தினர், என்னும் பெரிய புராணச் சரிதையாலும் விருந்து போற்று முறையை நன்கறியலாம்.

அன்றியும் சாவாமருந்து பெற்றுண்ணப் புகுங்கால் விருந்து வரின் அதனை விருந்தினர்க்கு ஊட்டவேண்டுவதே முறையாம்.

"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று" என்பதையும், பந்தன் என்பவன் தான் அரிதாகப் பெற்ற நெல்லிக்கனியை யுண்ணப் புகுங்கால் விருந்தாகவந்த ஔவைப்பிராட்டிக்கு உதவிய சரிதமும் வலியுறுத்து மென்க. "வேளாளனென்பான் விருந்திருக்க வுண்ணாதான்" என்ற பெரியார் திருவாக்கும் கவனித்தற் குரியது.

இம்மைப்பயன் :—இங்ஙனம் விருந்து போற்றுவார்க்கு இம்மையிலே சகல செல்வங்களும் வளர்வெய்து மெனவும், அவர் மனையில் இலக்குமிதேவி வாசஞ்செய்வாளெனவும் பொய்யா மொழி கூறும்.

"அகனமர்ந்து செய்யா ளுறையு முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில்" என்பதாம்.

மறுமைப்பயன்:—இம்மையிலே அன்புகனிந்து விருந்துபோற்றுவார் மறுமையிலே தேவர்களெல்லாம் உபசரித்து வாழ்த்திப் போற்றச் சுவர்க்காதி போகங்களை யனுபவிப்பர். இதனை

"செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு. என்னுந் திருவள்ளுவநாயனார் திருவாக்காலறிக.

விருந்து போற்றாமைக் கேடு:—இங்ஙனம் இம்மையினும் மறுமையினும் பெரும்பயனளிக்க வல்லதாகிய இப் பேரறத்தைச் செய்யாத பேதைமாக்களைப்பற்றி என்ன கூறுவது? இவர் இருமைப் பயனும் இழந்தவராவ ரென்பது மட்டுமன்று. விருந்தினர் வரக் கண்டு அவரை யுபசரியாத கொடியோனானவன் வந்த விருந்தினரின் பாவங்களையெல்லாம் பெறுவான் எனவும், வந்த விருந்தினன் அவனிடத்துள்ள புண்ணியங்களையெல்லாம் பெற்றேகுவானெனவும் ஸ்மிருதி கூறும். அந்தோ! விருந்துபோற்றாமையால் பிறன்

செய்த பாவங்களை யேற்றலோடு தான் செய்த புண்ணியத்தையும் இழந்தவனாகிறான். இதைவிட வேறு என்ன கேடுவரற் பாலது. இக்கொடுமையை நோக்கியே "விருந்தஞ்சும் ஈர்வளையை யில்லத் திருத்தலும் நன்மை பயத்தலில" என்றார் முதியோர். விருந்து போற்றாத மனையாளை வீட்டில் வைத்திருத்தலாகா தென்பது பெறப் படுகின்றது.

முடிவுரை.

ஒரு வேடன் வனசஞ்சாரியாக மழையில் நனைந்து ஒரு மரத் தடியில் வந்து நிற்க அம்மரத்தின் மேலிருந்த புறாவானது தானிருக்கு மிடத்திற்கு வந்த விருந்தினனாகிய வேடன் தனக்குச் சன்ம விரோதியேயாயினும் தன்னிருப்பிடநாடி வந்தமையால் அவன் நடுக்கத்தைப் போக்கி யுபசரித்துப் பாதுகாக்கவேண்டுமெனக் கருதிப் பக்கங்களிற் சென்று உலர்ந்த சிறு சுள்ளிகளைப் பொறுக்கி வந்து அவன் முன் குவித்துக் காட்டுத் தீப்பற்றி யெரியுமொரு சிறு கொள்ளியைக் கௌவிக்கொண்டுவந்து அதன் மேலிட்டு விறகுகள் பற்றி யெரியும்போது அத்தீயில் தான் வீழ்ந்து வேடன் குளிரையும் போக்கிப் பசியையும் ஆற்றியதாக இதிகாசம் முழங்குகின்றதே. பகுத்தறிவில்லாத பறவையின் குணம் எவ்வளவு சிறந்துளது. தன்னுயிரைப் போக்கியாவது விருந்தினன் துயரை மாற்றத் துணிந்ததே. இத்தகைய கதைகளையெல்லாம் கேட்டிருந்தும் நம்மவரிற் சிலர் விருந்தினரைப் பசிக்கவிட்டுத் தாமாத்திரம் வயிற்றை நிரப்புகின்றனரே. இஃதென்ன பாவம்! இல்லறத்தார் செய்யும் கடமைகளுள் சிறந்ததாகிய விருந்தோம்பல் என்ற தர்மத்தைப் போற்றி இம்மை மறுமைப் பயன்களை யடைவாராக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

பத்திராதிபர்.

விதை எடுத்தலும் விதை அடித்தலும்.

ஆண் மிருகங்கள் பொலிய லாயக்கில்லாதுபோய் இனத்தைப் பெருக்காமலிருக்கும்பொருட்டு இச்சிகிச்சைகள் செய்யப்படுகின்றன. விதை எடுத்தல் என்றால் மிருகங்களின் பீஜங்களையே எடுத்துப் போடுவது. ஆதலால் அதிற் கைதேர்ந்தவர்கள் அல்லாதவர்கள் அதைச் செய்ய எத்தனிக்கலாகாது.

காயடித்தல் அல்லது விரை அடித்தல்என்பது விதையையாவது இந்திரிய நாடியை (விதைக்கொடி) யாவது அல்லது இரண்டையுமாவது எடுத்துப் போடாமல் அழித்து பிராணிகளுக்குப் பொலியச் சக்தியில்லாமல் செய்தலாம். விதையடித்தல் காயடித்தல்) என்னும் கொடியசெய்கை எல்லாருக்குமே தெரிந்திருக்குமாதலால் அது செய்யும் விதத்தைக் குறித்து விரித்துச்சொல்லவேண்டியதிராது. இத்தேசத்தில் கிராமாந்தரங்களில் செய்து வருவது எப்படி என்றால் விதை கூழாய்ப்போகும் வரை அதை அடித்து நசுக்கி இளக்கிவிடுகிறார்கள் என்றே சொல்லலாம். இது செய்ய ஏறக்குறைய அரைமணி பிடிக்கும். அது ஆரம்பித்து முடிகிற வரையில் அந்தப்பிராணியானது பொறுக்கமுடியாத வேதனைப்பட்டுக்கொண்டேயிருக்கும். மிருகங்களை வசக்கி மனிதனுக்கு வேண்டியவேலைகளைச் செய்விக்கவேண்டுமானால் இப்படியேதாவதொன்றைச்செய்துதான் தீரவேண்டுமென்பதைக் கவனிக்கவேண்டும். சென்ற சிலவருஷங்களுக்கு முன் சாஸ்திரப்படி விதை எடுக்கத் தெரிந்தவர்கள் ஏதோ சில பெரியபட்டணங்களில் தவிர மற்றெங்கும் கிடையாது. அந்தக்காலத்தில் விதை அடிக்க கொஞ்சம் நியாயம் இருக்கத்தான் இருந்தது. ஜில்லா ஜில்லாவுக்கு மற்றவிஷயங்களில் பயிற்சி இருப்பதுபோல "விதை எடுப்பதிலும்" தேர்ச்சி உள்ள கால்நடை வைத்தியர் ஒருவரையாவது சர்க்காரில் நேமித்திருக்கும் இக்காலத்தில் நாகரீகமடைந்த தேசத்திலிருப்பவர்கள் கால்நடைகளைக் "காயடிக்க" விட்டுக்கொண்டிருப்பது மிகவும் இழிவு; விதையடிப்பதைவிட்டு "விதை எடுத்தலினால் உண்டாகும் முக்கியமான நன்மைகளை கீழே சுருக்கமாகக் குறித்திருக்கிறது: —

(1) விதையடிக்க அரைமணி செல்லும் விதை எடுக்கமட்டும் என்றால் கைப்பழக்கமுள்ள ஒருவனுக்கு 5 நிமிஷத்துக்குமேல் பிடியாது.

(2) குதிரைகளுக்கு, குட்டியாயிருக்கும்போது விதை எடுப்பதனால் 14 நாளில் நன்றாய் வாசியாய்விடும் மற்ற மாடு ஆடானால் விதை எடுத்தவுடனே மந்தையில்பற்றி விட்டுவிடலாம். பின்பு அதைப்பற்றி கவனிக்கவேண்டியதேயில்லை. விதை அடித்த வேதனை தீர்ந்து வாசியாக அநேகவாரம் செல்லும். அநேக சமயங்களில் காயடித்த இடத்தில் கட்டி உண்டாவதும் உண்டு.

(3) பீஜங்களை அடியோடு எடுத்துவிடுவதால் பின் அந்தப் பிராணிகள் பொலிய சற்றும் லாயக்கில்லாமல் போகுமென்பது தெளிவாய் விளங்குகிறது. இந்த நோக்கத்தோடு காயடித்தபோதிலும் பிராணிகள் படும் துயரத்தைப்பார்த்து சற்று முந்தியே விட்டுவிடுவதால் நமது உத்தேசம் சிலசமயங்களில் நிறைவேறுகிறதில்லை. அப்போது அது சரியானபடி பொலிய முடியாதுபோனுலும் (கள்ளக்காய் கிடப்பதால்) காமம் இருந்துகொண்டு பருவத்திலிருக்கும் பெட்டைகளை வீணில் அலைக்கழித்துக்கொண்டு அதுள்ளளவும் எல்லாருக்கும் பெருந் தொல்லையாயிருந்துவரும்.

(4) இந்த சிகிச்சை சீக்கிரத்தில் முடிந்துபோகிறதினுல் இத்தேசத்தில் விதை எடுக்கப்போகும் பிராணிகளுக்கு (மயக்கந்தர) க்ளோரபாரம்என்னும் மருந்து கொடுக்கிறதில்லை. இருந்தாலும் உடையவர்கள் விரும்புகிற பக்ஷத்தில் கால்நடைவைத்தியர் அந்தப்படி செய்வார். அப்போது அந்தமிருகங்களுக்குசற்றும் வருத்தம் தோற்ருதுபோகும். இரண்டு வயசாகிறவரையில் மிருகங்களுக்கு காயெடுக்கவாவது காயடிக்கவாவது கூடாதென்று ஒரு தப்பெண்ணம் இத்தேசத்தி லிருந்துவருகிறது. அநேக சமயங்களில் 3 அல்லது 4 வயசு வரை காயடிக்கிறதில்லை. இளமையில் காயடித்தால் வளர்ச்சி குன்றிப்போகுமென்று குடியானவர்கள் சொல்லுகிருர்கள். உண்மையில் எப்படி ஆகிறதென்ருல் காயடியாத காளை கழுத்துப்புறமும் திமில்புறமும் கனத்து லட்சணமில்லாமல் போகிறது. இளமையில் காயெடுத்துவிட்டால் தேகத்தின் முன்பக்கம் பருப்பதற்கு போகும் சத்து நாலாபக்கமும் சமமாய்ப்பரவி அது உயர்ந்து வளர்ந்து வயது வரும்போது சாதுவாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்கும்.

குடித்தனத்துக்குரிய மிருகங்களுக்கு காயெடுக்க வேண்டிய வயது கீழே குறிக்கப்பட்டிருக்கிறது:—

குதிரை கழுதைகளுக்கு	1 முதல் 2 வயது.
மாடு	3 மாதம் முதல் 1 வருஷம்.
ஆடு, வெள்ளாடு	1 முதல் 3 மாதம்.

முன் சொல்லியபடி பிரதி ஜில்லாவுக்கும் ஒரு கால்நடை வைத்தியரை நேமித்திருக்கிருர்கள். அவரைத் தாலூக்காவுக்கு ஒருமாதமாக தனக்கேற்பட்டிருக்கும் தாலூக்காக்கள்தோறும் சுற்றிவரத் திட்டம் செய்திருக்கிருர்கள். அவர் 4 முதல் 6 மாதத்திற்கு ஒரு தடவை ஒவ்வொரு தாலூக்காவுக்கும் வருவார். எந்த கிராமத்தாருக்காவது விதை எடுக்கவேண்டிய கால்நடைகளிருந்தால் தாலூக்கா தாசில்தாருக்கு எழுதிக்கொள்ளவேண்டியது. அவர் கால்நடை வைத்தியரை அந்த கிராமத்திற்குப் போக எழுதிவிடுவார்.

எப். வேர்,
ஸிவில் வெடரினரி சூபரின்டாண்டு.

Department of Agriculture, Madras.

மாலினீ மாதவம்.

(கக௪-ம் பக்கத் தொடர்ச்சி.)

அத்யாயம் 25.

முடிவு.

Conclusion.

தோற்றமுற் பவத்திற் செய்த தீங்குநன் கெனு மிரண்டும்
ஆற்றல்சால் கரும மென்ப ரக்கரு மத்தை நோக்கிச்
சாற்றுமிப் பிறப்பில் தக்க தரித்திரஞ் செல்வம் நல்கிப்
போற்றுவ னுயிரை யெல்லாம் பொலிசுடர்த் திகிரி வள்ளல்.

—குசேலோபாக்யானம்.

ஆக்கமும் வறுமை தானு மல்லலு மகிழ்வு மெல்லா
நீக்கமில் லுயிர்கட் கென்று நிலையெனக் கொள்ளற் பாற்றோ
மேக்குயர் கடவுட் டிங்கள் வெண்ணிலாக் கதிரின் கற்றை
போக்கொடு வரவு நாளு முறைமுறை பொருந்திற் றன்றே.

—கந்தபுராணம்.

இவ்வுலகின்கண் மானிட வாழ்வை, ஓயாது சுழலும் சக்கரத்துக் கொப்பிடுவது வழக்கம். இதற்கு ஸம்ஸாரசக்கர மென்று பெயர். எவ்வாறு சக்கரத்தின் பல பாகங்கள், உயர்வதும் தாழ்வதும் இயற்கையாயிருக்கின்றனவோ, அவ்வாறே மனித வாழ்விலும், சுகதுக்கங்களும், சுபாசுபங்களும், லாபநஷ்டங்களும் மாறி மாறியே வந்து கொண்டிருக்கின்றன.

இன்பம தடைந்த காலை யினிதென மகிழ்ச்சி யெய்தார்
துன்பம துற்ற போதுந் துன்னெனத் துளங்கிச் சோரார்
இன்பமுந் துன்பந் தானும் இவ்வுடற் கியைந்த வென்றே
முன்புறு தொடர்பை யோர்வார் முழுவது முணர்ந்த தீரர்.

மனிதனுடைய ஸங்கல்ப விகல்பங்களுக்கு அதிகமாக ஏதோ ஒரு பராசக்தி இருக்கின்றதென்றும், அது, அவனவன் கர்மானுபவத்துக்குத் தக்கவாறு பலனைக் கொடுக்கின்றதென்றும், கர்மவாதிகள் கூறுவார்கள். இம்மாஹா விசாரணையின் உண்மையும் தன்மையு மிவ்வாறிருக்க.

முன் அத்யாயத்தில் கூறிய விருத்தாந்தங்கள் நடந்து ஒரு வாரமாயிற்று. மணிபுரம் கொலைக்கேஸின் மாயவிளக்க விருத்தாந்தமானது உலக மெங்கும் பரவிற்று. முன் மதுரை ஜில்லா சூப்ரிண்டெண்டெண்ட், எல்லிஸ் துரையின்ப்ரசம்ஸைகளைப்பற்றிவெகுமுறுக்காய் வர்ணித்த நமது சென்னை தண்டரர் (Thunderer) என்னும் ஓர் ஆங்கிலோ-இந்தியன் பத்திரிகை, முன்பின் ஸம்பந்த மில்லாமலும் ஸந்தர்ப்ப உசித மில்லாமலும், உளறித் தவிக்க ஆரம்பித்தது.

“ப்ரிட்டிஷ் ராஜாங்கத்தின் அருமையை இந்நாட்டார் கொஞ்சமேனும் அறிந்தவரில்லை. ப்ரிட்டிஷ் ந்யாய விசாரணைகளில் ராஜாங்கத்தாருக்கு ஜனங்கள் உதவி செய்யாதிருப்பது ஓர் பெருங் குறையே. தீர்க்க தர்சியான எல்லிஸ் துரையவர்களுக்குக் கூட இக்கேஸ் அகப்படாதிருந்தது, மேற் கூறியவாறு ஜனங்களின், ந்யாயாபிமானக் குறைவைத்தான் தெரிவிக்கின்றது”

என்று; ஒரே அடியாய் பழியைஜனங்களின் மேல்சுமத்திப் பலவாறு ஆத்திரப்பட்டது.

‘ஆர்யா’ என்ற ஹிந்துப் பத்திரிகை, தன் முறை (Policy)ப்படி பின் வருமாறு முறையிட்டது:—

“மங்களபுரம் கொலைக் கேஸ் ஸம்பந்தமாய் அப்போதைக்கப்போது ஸகல நடபடிக்கைகளையும் வெளியிட்டிருப்பதை நமது நண்பர் அறிவார்கள். கொலையே நடந்திராதிருக்கும் பொழுது, நிரபராதியான மாதவன், ஸெஷன்ஸ் கோர்ட்டில், கொலை செய்தவனாய்த் தீர்க்கப்பட்டு, மரண தண்டனையும் விதிக்கப்பட்டது அதிக ஆச்சர்யமாயிருக்கின்றது.

“இறந்ததாகச் சொல்லப்பட்ட தினகரன், சற்று 5 நிமிஷம் தாமதமாய் தூக்கு ஸ்தானம் வந்திருந்தால், மாதவன் கதி எவ்வாறு முடிந்திருக்கும்! இவ்விஷயம் நமது இராஜாங்கத்தார் நன்று கவனிக்க வேண்டும், இக்கொலைக் கேஸினின்றும், நாமறிவ தென்னவென்றால், நமது ராஜாங்கத்தார் நமது நன்மையை எவ்வளவோ கருதியும், ந்யாய பரிசீலனை (Judicial Machinery) யந்திரத்தில் ஏதோ சில சிக்கல்கள் (Complications) இருக்கின்றன வென்றும், அதன் சில முக்ய உபகரணங்கள் (Parts) சிதலமடைந்திருக்கின்றன வென்றும் நன்றாய் விளங்கும்.

"போலீஸ் சீர்திருத்த விஷயத்தில் போலீஸ் கமிஷன் நியமன மான காலம் முதலே, இப்போது செய்திருக்கும் சீர்திருத்தங்கள் சரியல்லவென்று அப்போதைக்கப்போது நமது பத்திரிகை மூல மாய் வெளியிட்டிருக்கின்றோம்.

"யார் வைத்த தீயானால் என்ன? வீடு வெந்ததில் குறை வில்லை! என்று சொல்லும்படி, கணந்தப்பினால், நிரபராதியான மாதவன் மரணமடைந்திருப்பான். மனித பலம் முழுமையும் அவ னுக்கு விரோதமாயிருந்திருக்க, அவன் தப்பியது தெய்வ பலம் என்றே சொல்லவேண்டும்.

"இவ்விஷயமானது ஆதியோடந்தமாய் நமது ராஜாங்கத்தார் விசாரணைசெய்வார்களென்றும், நமது சட்ட சபையில், யாராவது ஓர் (ஆனரபிள்) கௌரவஸ்ரீமான் கேள்வி (Interpellation) கேட் பார் என்றும் எதிர் பார்க்கின்றோம்."

அடுத்தநாள். 'ஆர்யா' பின்வருமாறு கூறுகின்றது. மணிபுரம் கொலைக்கேஸில் மரணதண்டனையடைய இருந்த மாதவன், மணிபு ரம் முன் ஜமீன்தார் தர்மராஜாவின் மகனென்றும், இப்பொழுதிய கிருஷ்ணராஜாவின் தமையன் புதல்வனென்றும், மணிபுரத்துக்குச் சரியான வாரிஸ்என்றும் கேட்க நமதுநண்பர்கள் ஆச்சரியமடைவார் கள். முன் ஜமீன்தாரும், அவர் மனைவியும் கொலையுண்டதும், அக்கொலை மாயம் நுட்ப தர்சிகளாகிய போலீஸ் நிபுணர்களாலுங் கூட விளக்கப்படாது மறைந்திருப்பதும், இறந்தவர் தம்பி கிரு ஷ்ணராஜ், ராஜ்யத்தையே வெறுத்திருந்ததும், இப்பத்திரிகை மூல மாய் நமது நண்பர்கள் அப்போதைக்கப்போது அறிந்திருப்பார்கள்.

தன் தமயன் புதல்வன் மாதவனென்றும், அவன் உயிர்த்திரு க்கப்பார்க்க நேர்ந்தது தன் பெரும் பாக்யமென்றும், உள்ளங்குளிர் ந்த கிருஷ்ணராஜன் உடனே மாதவனை ஆலிங்கனஞ் செய்து கண் ணீர் சொரிந்தாராம். மாதவனுக்கு ராஜ்யத்தைத் தானே யிருந்து பட்டம் கட்டுவிக்கப் போகிறாராம்.

"மாலினியை மாதவன் விவாகம் செய்யப்போகிறான். இவ்விரண்டு சந்தோஷ கார்யங்களும் அடுத்த வெள்ளிக்கிழமை நடக்கின்றனவாம். தான் உத்தர இந்தியா ஸஞ்சாரம் செய்வதாயும், தனக்கு யாதொரு

பொருளுதவியும் வேண்டாம் என்று கிருஷ்ணராஜா மறுத்தும், பெருந்தன்மை வாய்ந்த மாதவன், அவருக்கு மாதம் 400 ரூ அனுப்புவதாய் வாக்களித்திருக்கின்றாராம்.

"..

கள்ளன்கோட்டைத் தலைவர்கள் தங்கள் கோட்டை கொத்தளங்களையும் சிறிது பூமியையும் மாதவனுக்குச் சாஸனம் செய்துவிட்டு, அதற்கு ப்ரதி ப்ரயோசனமாய் மாதம் ஒன்றுக்கு 300 ரூ அவர்கள் ஆயுளளவும் பெறுவதென்ற ஒப்பந்தத்துடன் தேசஸஞ்சாரம் செய்யப் போய்விட்டார்களாம். திடீரென்று சம்பவித்த இதன் மாயம் இன்னவென்று விளங்கவில்லை.

மதுரைஜில்லாவுக்கே ஓர் திலகம்போல் விளங்கும் இப்பூர்வ ஜமீன்தாரி மறுபடி நன்னிலைமையடைந்து மாதவன் ஆளுகையில் செழித்தோங்கும் என்று நாம் வேண்டுகின்றோம்.

பாலூர் ஜமீன் வியாஜ்யமானது ப்ரக்ருத ஜமீன்தார் குணசேகரருக்கு அனுகூலமாய், ஷை ஜமீன்தாரியையும், அவர்ஒப்புக்கொண்டுவிட்டார்."

இப்பத்திரிகையின் அபிப்பிராய மிவ்வாறிருக்க, தூக்குநாள் இரவில், பரதேசியாருக்குக் கிருஷ்ணராஜ் எழுதிக்கொடுத்த கடிதம் அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

"..

எல்லோரும் என்னை நல்லவன் என்று நினைத்திருக்க, என்னைப் போன்ற பரமபாதகனும் துரோகியும் உலகத்திலேயே கிடையாது. என் அண்ணனையும், அவர்மனைவியையும் கொன்றது நானே. அன்று இரவு கொன்றுவிட்டு அடுத்த மெயில்வண்டியில் பட்டணம் ஓடிவிட்டேன். மறுபடி ஸமாசாரம் தெரிந்து வந்தவன்போல வந்து வேண்டிய அபரக்கிரியைகள் செய்தேன். மாதவனைக் கொல்ல நினைத்தது மாறிப்போய், தாதியின் பெண்குழந்தையைக் கொன்றுவிட்டோம். உலகத்துக்கு ஆண்குழந்தை இறந்ததாகத் தான் வதந்தி, ஆண்குழந்தை காணவில்லை. தாதியும் காணப்படவில்லை நாங்கள் தப்பிதத்தை யறிந்ததும் பரவினவதந்தி அவ்வாறே இருக்கட்டுமென்று, அக்குழந்

தையை ஜமீன்தார் புதல்வனென்றே சொல்லிப் புதைத்தோம். இப்போது சமாதியிலிருப்பது பெண்குழந்தையே.

பிறகு ராஜ்யத்தை ஒப்புக்கொள்ள எனக்கே மனம் ஸகிக்கவில்லை. எப்போதாவது மணிபுரம் வந்தால், என்னோடு யார் பேசினாலும், கொலையை யறிந்து பேசுவதுபோல் எனக்குப் பயமாயிருக்கும். இவ்வாறு நான் கனவிலும் நினைவிலும் பட்டதுயரமும், அடிக்கடி கொலையுண்டவர் என் கனவில் தோன்றுவதும், என்வாழ்நாளெல்லாம் வீண் நாளாக்கின. இவ்வாறு கஷ்டகாலங் கழித்துவரும் காலத்தில், மாலினியின் பேரழகால், ஒருவேளை என்வாழ்வைப் பயன்படச் செய்யலாமென்று நினைத்தேன். "கெடுவான் கேடு நினைப்பான்." ஆனால் பரதேசியின் புத்தித் திறமையையும், அக்குழந்தை கொலைக்குத் தப்பி எங்கேயோ தென்படாது வளர்ந்து வருகின்றான் என்பதையும் நினைக்குங்கால், இன்றைக்குத் தப்பினும் என்றைக்காவது ஆபத்துக்குட்பட்டுத்தான் தீரவேண்டுமென்று நிச்சயமாய் நினைத்திருந்தேன். கடைசியில் மாதவன் தன் தாய் தந்தையர்பேர் கூடத் தெரியாது மாயமாய் வளர்வதையும் அவனிடத்துப் பரதேசி அவ்வளவு அன்பு பாராட்டவும் காண எண்ணாத எண்ணமெல்லாமெண்ணி யெண்ணி ஏழைநெஞ்சம் புண்ணாயிற்று என்று திகிலடைந்து விட்டேன். எப்படியாவது மாதவனைத் தொலைக்க வழி தேடினேன். தான் கொலைசெய்ததாய் என்னிடம் அவன் ஒப்புக்கொள்ளவில்லை. ஸெஷன்ஸ்கோர்ட்டில் நான் கொடுத்த வாக்குமூலம் முற்றிலும் பொய்.

ஏதோ என் மனதிலிருப்பதைச் சொல்லி முடித்தேன். இனி ரக்ஷித்தாலும் நீர்தான். சிக்ஷித்தாலும் நீர்தான்."

கிருஷ்ணராஜன் எழுதிய இக்கடிதத்தை ரகஸ்யமாய்ப் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டார் நமது பரதேசியார், அதிகமாய் வளர்ப்பானேன்? குறித்த தினத்தில், மங்களகரமாய் மாலினிக்கும் மாதவனுக்கும் விவாஹமஹோத்ஸவமும், மணிபுரம் யட்டாபிஷேகமும் நடந்து முடிந்தன. கிருஷ்ணராஜன் கூடவே இருந்து எல்லாவற்றையும் நடத்தி வைத்தார். அவருடைய தர்மசிந்தையையும், ஒழிவையும் அன்பையும் பற்றி எல்லோரும் வியந்தார்கள். 'ஆர்யா' பத்திரிகை க்கா

மப்படி, பத்திரிகா முகத் (Editorial Column) தில் மணிபுரம் கிருஷ்ணராஜனைப் பற்றி ஸ்துதி செய்து தீர்த்தது.

ஊர் வழக்கப்படிக்கும் நவீன நாகரீகத்துக்கிணங்கவும், விருந்துகளும் தமாஷாக்களும் நடந்தன.

மாதவனும் மாலினியும் மணிபுரத்தில் சுகமாயரசாண்டு வருகின்றார்கள். பாலூர் ஜமீன்தார் தன் மகன் தினகரனிடம் ராஜ்யத்தை ஒப்புவித்து விட்டு, தீர்த்த யாத்திரை சென்றிருக்கின்றார்.

மணிபுரம் கிருஷ்ணராஜன், மாதம் ஒன்றுக்கு 400 ரூபாய் பெற்றுக்கொண்டு காசிநகரில் வசிக்கின்றார்.

நமது பரதேசிபாரும் அன்னவர் ஸகோதரியும், தோழி கமலாவும் மாதவனுடன் சௌக்கியமாய் வசித்து வருகின்றார்கள்.

இவ்வாறு மணிபுரம் கொடுங்கதையின் மாயங்கள் வெளிவராது இம்மட்டில் ரகஸ்யமாகவே இருக்கின்றன. இம்மாயமானது இக்கதாபுருஷர் சிலருக்கு மாத்திரம் தெரியுமே யொழிய, வேறொருவரும் அறியார்கள்.

போலீஸ் பரிசீலனை ரிப்போர்ட் வருஷந்தோறும் வழக்கப்படி புகழ்ச்சியாகவே இருக்கின்றது. ஆர்யாவும், தண்டாரும், க்ரமப்படி தங்கள் முறையைக் கழித்து வருகின்றன.

முற்றிற்று.

R. S. நாராயணஸ்வாமி ஐயர். B. A. B. L.

கமலினி.

(கசச-ம் பக்கத்தொடர்ச்சி)

கமலினி:—இங்கு வந்த பிறகு சொல்லிக்கொள்ளலா மென்றிருந்தேன். அங்கேயே சொன்னால் நீயொருவேளை என்னுடன் வருவதற்கு சம்மதிக்க மாட்டாயோ வென்று நினைத்து புறப்படும்போது சொல்ல வில்லை.

கோமதி:—இவ்வளவுதானா நீ யென்னை யறிந்தது? உன் தாயிறந்த நாள் முதல் உன்னை நான் பெற்ற மகளை விட அதிகமாக பாவித்து வளர்த்து வந்தேனே! நானா உன்னுடன் வருவதற்கு சம்மதிக்க மாட்டே னென்று நினைத்தாய்? நீ யெங்கே கூப்பிட்டாலும் வருகிறேன் கமலினி.

கமலினி:—அம்மா, இவ்வளவு அன்பிற்கு நான் என்ன பிரதியுபகாரஞ் செய்யப்போகின்றேன்?

கோமதி;—உன்னிடத்தில் நான் பிரதியுபகாரத்தை யெதிர் பார்த்தா லல்லவோ. நீ யெப்படி செய்யப்போகிறேனென்று யோசிக்க வேண்டும். அஃதிருக்கட்டும். இப்பொழுது எங்கே போவதாக உத்தேசிக்கிறாய்?

கமலினி:—மதுரைக்குப் போகலாமென் றெண்ணுகிறேன்.

கோமதி:—மதுரையில் முருகன் கோவிலிருக்கிறதோ?

கமலினி:—ஏனப்படி கேட்கிறாய்? முருகன் கோவிலிருந்தால் தான் போக வேண்டுமோ?.

கோமதி:—முன்னொரு தடவை நீ யென்னிடஞ் சொன்னதை மறந்து விட்டாயோ?

கமலினி:—நானென்ன சொன்னேன். ஞாபகமில்லையே?

கோமதி:—முருகனடியார்கள் மற்ற தெய்வங்களைக் கைபெடுக்க மாட்டார்க ளென்றும் மற்ற கோவில்களுக்குப் போகமாட்டார்க ளென்றுஞ் சொன்னாயல்லவா?

கமலினி:—அதுண்மைதான்.

"தானவனுதி விநாயக ஞன்முகன் சங்குசக்ர
வான்வன் ருத்திரன் மயேஸ்வர னீசன்வடிவினவையே
யானவ ஞறு முகத்தன் பரசம யத்தன்முரு
கோனவனின்னெழுத்தாறே பொருளெனக் கொண்டவனே"

என்றபடி முருகக்கடவுள் மற்றெல்லாத் தெய்வங்களின் வடிவுந் தானே கொண்டவராதலால், அவருடைய அடியார்கள் மற்றைய தெய்வங்களைக் கையெடுக்க வேண்டிய தவசிய மில்லைதான்.

கோமதி:—அப்படியானு லுனக்கு மதுரையி லென்னவேலை?

கமலினி:—(சற்றுநேரம் யோசித்துக் கொண்டிருந்து) என்னந்தரங்கத்தை யுன்னிடத்திற் சொல்லாமல் வேறு யாரிடத்திற் சொல்லப்போகின்றேன் "தாய்க்கொழித்த சூலா"?

கோமதி:—கமலினி, உனக்கென்ன அந்தரங்க மிருக்கிறது?

கமலினி:—இருக்கிறது, சொல்லுகிறேன். நீ அதை வேறொருவரிடத்திலும் சொல்லக்கூடாது.

கோமதி:—அப்படிச் செய்வேனு?

கமலினி:—நான் இப்பொழுது மதுரைக்குப் போகவேண்டுமென்றுத்தேசித் திருப்பது நம்முடைய சக்ரவர்த்தியைப் பார்த்து வருவதற்காகவே யல்லாமல் வேறு காரணத்தைக் கொண்டல்ல.

கோமதி:—என்ன! சக்ரவர்த்தியைப் போய்ப் பார்க்கப் போகிருயா? சக்ரவர்த்தியிடமுனக் கென்ன வேலை?

கமலினி:—சக்ரவர்த்திக்கு உடம்பு அசௌக்கியமா யிருக்கிறதாம். நான் போய் குணப்படுத்தி வரலாமென்று நினைக்கின்றேன்.

கோமதி:—கமலினி, பரிகாசஞ் செய்கிருயா என்னை?

கமலினி:—இல்லையம்மா, நான் சொல்வதுண்மையே.

கோமதி:—உண்மையாவது பொய்யாவது! உனக்கென்ன வயித்தியம் தெரியும்? நீ போய் சக்ரவர்த்தியைக் குணப்படுத்துவதாவது?

கமலினி:—எனக்கு வயித்தியம் தெரியாது தான். ஆனல் என் தகப்ப னிறக்குந் தருணத்தில் அன்னிடத்திலொரு அருமை

'யான மருந்து கொடுத்து விட்டுப் போனார். அம்மருந்தைக் கொடுத்து சக்ரவர்த்தியைக் குணப்படுத்தலாமென்றெண்ணுகிறேன்.

கோமதி:—இதுவரையில் யாருக்காவது அம்மருந்தைக் கொடுத்து அதின் குணமின்னதென்று தெரிந்திருக்கிறாயா?

கமலினி:—இல்லை.

கோமதி:—மருந்தின் குணந் தெரியாமலதைக் கொண்டு போய்ச் சக்ரவர்த்திக்குக் கொடுக்கப்போகிறே னென்று சொல்லுகிறாயே. கடவுள் கிருபையால் நோய் குணமாகி விட்டால் நலம். ஏதாவது கெடுதியேற்பட்டால் உன்னைச் சும்மா விடுவார்களா? பெருந் தண்டனை யேற்படுமே.

கமலினி:—தண்டனை யென்ன? என்னுயிரை வாங்கி விடுவார்கள்.

கோமதி:—என்ன அவ்வளவு லேசாய்ச் சொல்லி விட்டாயே? அப்படிப்பட்ட காரியத்தி லேன் பிரவேசிக்கிறாய்? உனக்கதனால் ஏதாவது லாபமுண்டா? அம்மருந்து நிச்சயமாய்க் குணஞ் செய்யுமென்றுனக்குத் தெரிந்திருந்தாலும் நமது சக்ரவர்த்தியாயிற்றே யென்ற ராஜ விசுவாசத்தால் நீ அம்மருந்தைக் கொடுக்க நினைக்கலாம். அதுவுந் தெரியாது. குணமாகா விட்டாலுனக்கொரு கெடுதியுமேற்படாவிட்டாலும் கொடுத்துப் பார்க்கலாமென் றெண்ணலாம். அதுவுமில்லை. குணமாகா விட்டாலுன்னுயிர் போய்விடுமென்றுஞ் சொல்லுகிறாய். அப்படியிருக்கும்போது ஏன் நீ இந்தக் காரியத்தைச் செய்ய நினைக்கிறாய்? இருக்கட்டும். இச்சங்கதி நம்முடைய மன்னனுக்கும் அவர் தாய்க்கும் தெரியுமா?

கமலினி:—நான் ஊரிலிருந்து புறப்படும்போது இக்காரியத்தை யவர்களிடஞ் சொல்லவில்லை. நேற்று இது விஷயமாயவர்களுக்குக் கடிதமெழுதி யிருக்கிறேன்.

கோமதி:—கமலினி, எல்லாம் மோசமாய்த் தோன்றுகிறதே. உன்னை யன்பாய் வளர்த்து வருகிற மன்னனது தாயாரிடத்திலுஞ் சொல்லாமல் நீ யிக்காரியத்தை யுத்தேசித்துப் புறப்பட்டு வந்திருக்கிறதைப் பார்த்தால் நீ யவர்களிடத்தில் ஏதோ வெறுப்புக்கொண்டு உன்னுயிரை விடுவதற்கு இதை யொரு வழியாகத் தேடிக்கொண்டாயென்று நினைக்க வேண்டியதா யிருக்கிறது.

கமலினி:—அப்படிச் சொல்லாதே யம்மா! அவர்கள் என்னை வளர்த்து வருகிற அன்பிற்கு நான் என்ன செய்தால் தான் ஈடாகப் போகின்றது? அப்படியிருக்க நான் ஏனவர்களிடத்தில் வெறுப்புக் கொள்ளப் போகின்றேன்? அவர்களிடத்திலுள்ள அதிக விருப்பினாலே இக்காரியத்தைச் செய்யத் துணிந்தேனே யல்லது வெறுப்பினாலல்ல.

கோமதி:—அவர்களிடத்துள்ள விருப்பினால் இந்தக் காரியஞ் செய்வானேன்?

கமலினி:—நான் சொல்வதைச் சற்றுக் கவனமாய்க் கேட்கவேண்டும். வெளியிலும் விடக்கூடாது. அப்படியானால் சொல்லுகிறேன்.

கோமதி:—சொல்லு. இன்னுமென்ன அதிசயஞ் சொல்லப் போகிறாயோ தெரியவில்லையே.

கமலினி:—(மெதுவாக) நான் வீரகேசரி மன்னனை அதிக அன்புடன் நேசிக்கின்றேன்.

கோமதி:—அதனாலென்ன? இருக்கக்கூடியதுதானே. சிறு வயதுமுதல் ஒன்றாய்க்கூடி விளையாடிக்கொண் டிருந்திருக்கிறீர்கள்! அன்பு இருக்கக்கூடியது தானே. அதற்கும் சக்ரவர்த்திக்கு மருந்து கொடுப்பதற்கும் என்ன சம்பந்தமிருக்கிறது?

கமலினி:—(குனிந்துகொண்டு) நான் வீரகேசரி மன்னனை கொஞ்சகாலமாய் வேறுவிதமாய் நேசிக்கின்றேன்.

கோமதி:—வேறு விதமாய் நேசிக்கிறாயா? என்னவிதம்? தெரியவில்லையே.

கமலினி:—(வெட்கி மெதுவாக) அவரை என் நாயகனாக அடையவேண்டுமென்ற விருப்பம் கொஞ்சகாலமா யெனக்கு உண்டாயிருக்கின்றது.

கோமதி:—என்ன! நீ அவரை நாயகனாக அடையவேண்டுமென்று விரும்புகிறாயா? எல்லாம் மிக்க ஆச்சரியமாயிருக்கின்றதே.

கமலினி:—கேவலம் ஒருவயித்தியன் மகளாகிய நான் ஒரு அரசனை மணஞ்செய்ய விரும்புகின்றேனே யென்று உனக்குத்தோன்றுகிறதா?

கோமதி:—கமலினி நானப்படி நினைக்கவேயில்லை. வயித்தி யன் மகளென்றால் கேவலமா? உன்னைப்போல் அழகான பெண்கள் ராஜவம்சத்திலு மிருப்பார்களென்று நான் நினைக்கவில்லை. அப்படி யிருந்தபோதிலும் அவர்களுக்கு உன்னுடைய நற்குணங்களும் தெ ய்வ பக்தியும் அமையுமா? எந்த விஷயத்திலும் நீயொரு அரசனது மனைவியாவதற்கேற்றவளே யல்லாமல் குறைந்தவளல்ல. அதைப் பற்றி நானொன்றுஞ் சொல்லவில்லை. நீ யொன்றுமறியாத சிறுபெண் ணென்று எண்ணியிருந்தேன். உனக்கு இந்த எண்ணந் தோன்றி னதைப் பற்றி ஆச்சரியப்பட்டேனே யொழிய வேறில்லை. இருக் கட்டும். நீ மன்னனை மணஞ்செய்வதற்கும் சக்ரவர்த்தியைக் குணப் படுத்துவதற்கு மென்ன சம்பந்த மிருக்கிறதென்று இன்னுந் தெரிய வில்லையே.

கமலினி:—சக்ரவர்த்தியைக் குணப்படுத்தி அவரைக்கொண்டு என் விவாகத்தை முடித்துக்கொள்ளலாமென்று எண்ணி யிருக்கி றேன்.

கோமதி:—சரிதான். இப்பொழுது தெரிந்துகொண்டேன். குணப்படுத்தினால் விவாகத்தை முடித்துக்கொள்வாய். குணப்படு த்தாவிட்டா லுன்னுயிர் போய்விடுமென்கிறாயே? பிறகு என்னசெய் வது?

கமலினி:—சக்ரவர்த்தியைக் குணப்படுத்தா விட்டால் என் விவாகம் நிறைவேற வேறு வழியில்லை. என் விவாகம் நிறைவேறாத வரையில் என்னுயிர் போவதற்கும் நான் அஞ்சவில்லை.

கோமதி:—மன்னனிடத்தில் உனக்கு அவ்வளவுபிரியமா ஏற்பட் டிருக்கிறது? ஆனால் கட்டாயமாய் மதுரைக்குப்போகத்தான் வேண் டுமோ?

கமலினி:—அதற்கென்ன சந்தேகம்? அதற்காகவே இங்கு வந் திருக்கிறோமே.

கோமதி:—ஆனாலெப்பொழுது புறப்படவேண்டுமென்று எண் ணியிருக்கிறாய்?

கமலினி:—நாளைக்காலையில் புறப்பட்டுப் போகலாமென்றெண் ணுகிறேன்.

கோமதி:—சரி. உன் முருகன்தான் உனக்குத் துணை செய்ய வேண்டும்.

கமலினி:—முருகனை முன்னிட்டே முயற்சி செய்கின்றேன்.

அங்கம் 11. களம் 2.

இடம்: மதுரையில் சக்ரவர்த்தியி னரண்மனையிலோரறை.

காலம்: காலை.

(சக்ரவர்த்தி படுத்துக்கொண்டிருக்கிறார். மந்திரிகளும் மற்ற வர்களும் பக்கத்தி லுட்கார்ந்திருக்கிறார்கள்.)

சேவகன்:—(தெண்டஞ்செய்து) நெல்வேலியிலிருந்து ஒருவயித்தியப் பெண் வந்திருக்கிறாள். தன் வரவை அறிவிக்கச் சொல்லுகிறாள்.

இரண்டாவதுமந்திரி:—நமது பூபதிக்கு வயித்தியஞ்செய்வதற்காகவா வந்திருக்கிறாள்?

சேவகன்:—ஆம்.

இரண்டாவது மந்திரி:—பெண்ணுக்கென்ன வயித்தியம் தெரியப் போகின்றது?

முதல் மந்திரி:—அப்படிச் சொல்லலாமா? பெண்ணானாலும்வயித்திய சாஸ்திரத்தில் தேர்ந்தவளா யிருக்கலாம். இல்லாவிடில் தைரியமாய் இங்கு வருவாளா?

சக்ரவர்த்தி:—(விழித்துப் பார்த்து) என்ன சங்கதி?

முதல் மந்திரி:—இவ்விடத்திற்கு வயித்தியஞ் செய்வதற்காக ஒரு பெண் வந்திருக்கிறாளாம். அதைப்பற்றி யோசித்துக்கொண்டிருந்தோம். என்ன உத்தரவு?

சக்ரவர்த்தி:—அழைத்துவரச் செய்யுங்கள்.

முதல் மந்திரி:—சேவகா! அப்பெண்மணியை யழைத்துவா.

(சேவகன் உத்தரவு பெற்றுப் போகிறான்.)

(கமலினி வந்து எல்லோருக்கும் நமஸ்காரஞ் செய்து நிற்கின்றாள்.)

சக்ரவர்த்தி:—(கமலினியைப் பார்த்து) நீ யார்? எங்கு வந்தாய்?

கமலினி:—நான் நெல்வேலியிலிருந்து இறந்துபோன ஒருவயித்தியரின் மகள். என் பெயர் கமலினி. என்னிடத்தில் ஒரு சிறந்த மருந்திருக்கிறது. சக்ரவர்த்திக்கு உடம்பு அசௌகரியமாயிருக்கிறதென்று நெல்வேலியில் விளம்பரஞ் செய்ததைக் கேட்டதுமன்றி கார்த்திகைக்கு திருப்பரங்குன்றத்திற்கு வந்திருந்தேன்; அவ்விடத்திலும் கேள்விப்பட்டேன். அதன்பேரிலிங்கு வந்தேன்.

முதல் மந்திரி:—அம்மருந்து யாரால் தயார் செய்யப்பட்டது?

கமலினி:—என் தகப்பனால் தயார் செய்யப்பட்டு அவர் இறக்குந் தருணத்தில் என் வசமாகக் கொடுக்கப்பட்டது. எவ்வளவு கொடிய நோயா யிருந்தபோதிலும் நோயாளி எவ்வளவு அபாயகரமான நிலைமையி லிருந்தபோதிலும் அம்மருந்தைக் கொடுத்தால் குணப்படுத்துமென்று சொல்லி என்னிடங் கொடுத்தார். ஆகையாலிங்கு வந்தேன்.

சக்ரவர்த்தி:—என்னுடைய நோயை அம்மருந்தால் குணப்படுத்தலாமென்ற நம்பிக்கை யுனக்கிருக்கிறதா?

கமலினி:—ஞானபண்டிதனாகிய செந்திலாதிபன் கிருபையால் குணப்படுத்தலா மென்றே நினைக்கிறேன்.

சக்ரவர்த்தி:—எவ்வளவு நாட்களுக்குள் குணப்படுத்தலாமென்று நினைக்கிறாய்?

கமலினி:—மூன்றுநாள் அம்மருந்தைச் சாப்பிட்டால் போதுமென் றெண்ணுகிறேன்.

சக்ரவர்த்தி:—அப்படியானால் உன் மருந்தைச் சாப்பிட்டுப்பார்க்கிறேன். நீ சொல்லுகிறபடி குணமாகிவிட்டால் உனக்குவேண்டுந் திரவியங்களளிக்கின்றேன்.

இரண்டாவது மந்திரி:—குணமாகாவிட்டால் என்ன ஆக்கினை யேற்படுமென்று தெரியுமா?

கமலினி:—தெரியும். என் தலை போய்விடும்.

இரண்டாவது மந்திரி:—ஆம். நீ யொரு பெண்ணொன்றும் பார்க்கப்படமாட்டாது.

கமலினி:—அதைத் தெரிந்துதான் இவ்விடத்திற்கு வந்ிருக்கிறேன்.

சக்ரவர்த்தி:—அப்படியானால் நாளையதினமுதல் உன்மருந்தைச் சாப்பிடுகிறேன். மந்திரி! இப்பெண்ணுக்கு வேண்டிய சௌகரியங்கள் நமது அரண்மனையிலேயே செய்து கொடுங்கள்.

முதல் மந்திரி:—உத்தரவுப்படி வேண்டிய சௌகரியங்களெல்லாஞ் செய்கிறேன்.

கமலினி:—போய் வருகிறேன். பூபதி.

சக்ரவர்த்தி:—அப்படியே. (கமலினியும் மந்திரிகளெல்லோரும் போனார்கள்.) இப்பெண்மணியின் மன உறுதியையும் திடமான தெய்வ பக்தியையும் நோக்குமிடத்து இப்பெண்ணால் நமக்குக் குணமேற்படுமென்றே என் மனதில் தோன்றுகின்றது. இவ்வளவு காலமாய் நான் கஷ்டப்படுகிறதைப் பார்த்து மனமிரங்கி நமது மீனும்பிகையே இவ்வுருவெடுத்து வந்ததுபோல் தோன்றுகிறது. லோகமாதா! உன் பாதாரவிந்தங்களையே கதியென்று நம்பியிருக்கிற எனக்கு இவ்வளவு துன்பமேற்படலாமா? இது முன் செய்த தீவினைப் பயனென்றே நினைக்க வேண்டியதாயிருக்கிறது. நீயே கதி. நீ யெப்படிச் செய்தாலு முனக்கே அடைக்கலம். இவ்வளவு பேசினது எனக்கு மிக்க களைப்பாகவிருக்கிறது.

(படுத்துக்கொள்கிறார்.)

(இன்னும் வரும்.)

டி. யம். சங்கரலிங்கம்பிள்ளை, பி. ஏ.

* நல்லுலகம்.

குழந்தை:—"நல்லுல கென்னநீ சொல்லக் கேட்கிறேன்;
அதில்வாழ் மக்களை அனுபவிப் பவர் சுகம்
என்கின் றனையே. அன்னையே! அந்த
ஒளிமய மான உலகுயாங் குள்ளது?
நாமும் அதனை நாடிச் சென்றதில்
இன்பமே எய்தி இருக்கலா காதோ?
கிச்சிலி மலர்அலர் கின்ற இடத்திலா
அது இருக்கின்றது? அல்லையேல், அன்னது
மணம்மிக வீசும் மரக்கிளை களுக்கிடை
கூடிமின் மினிக்குலம் கூத்தா டிடத்திலோ?"
தாய்:—"அங்கிலை; அங்கிலை. அருமைக் குழந்தாய்"
குழந்தை:—"கூந்தற் பனைமரக் குலம்உள இடத்திலா?
வெப்பம் மிக்க வெளிகளி லேயே
ஈச்சங் கனிமுதிர்ந் திடுமிட மதனிலா?
மருமிகு வனம்நறு மணக்காற் றடிப்பதும்,
விண்மீன் என்ன விளங்கும் சிறைகள்
உள்ள நவநவ ஒள்ளிய புள்ளினம்,
சிறந்தபல் பொருள்களின் நிறங்கள்வாய்ந் துள்ளது
மான ஒளிமிகு ஆழிகட் கிடையில்
உரைபந் நிறத்த வளமிகு தீவிலோ?"

[* இது "Mrs. Hemans" என்ற ஆங்கிலமாது பாடிய "The Better Land" என்பதன் மொழி பெயர்ப்பு]

தாய்:—"அங்கிலை; அங்கிலை. அருமைக் குழந்தாய்!"
குழந்தை:—"அதிதூ ரத்தில் ஆங்கெங் கெனும்உள
பழம்பூ மிகளிற் பைம்பொன் மணல்மிசை
ஆறுகள் ஓடும் அவ்விடத் தேயோ?
காந்தி மிக்க கதிருடன் கூடிய,
பதும ராகம் பளிரிடும் இடத்திலோ?
மறைந்துள கனிகளில் மாமணி ஒளிவிடும்
இடந்தனி லேயோ இருக்கிற தவ்விடம்?
பவளம் பற்றிப் படர்மணல் மீது,
முத்துகள் மின்னும் அத்தலம் தனிலோ?
இந்த இடத்திலா அந்தநல் உலகம்
இருக்கின் றதுசொல்? இனியநற் றாயே!"
தாய்:—"அங்கிலை; அங்கிலை, அருமைக் குழந்தாய்"
செல்வச் சிறுவ! செப்புவன் கேளாய்:—
கண்கள்அவ் வுலகைக் கண்டதே இல்லை.
அன்றியும், செவிகள் அதன்பே ரின்பக்,
கீத நாதம் கேட்டதே இல்லை.
அதனைப் போன்ற அழகிய உலகினைக்,
கனவிலும் கூடக் காணொண் ணாது.
நோய்சாக் காடு நுழையா ஆங்கு,
அதன்மங் காக்களை ஆனது காலக்
கழிவினும் என்றும் அழிவடை யாதே.
அதுவா னுக்கும் அப்பால் உள்ளது,
இறந்த பின்னரே எய்தும் உலகு அது.
இங்குதான் உள்ளது இங்கு தான் உள்ளது
அருமைக் குழந்தாய் அந்தநல் லுலகே."

ம. கோபாலகிருஷ்ணையர்.

நற்குணப் பயிற்சி.

"நல்லாரைக் காண்பதுவு நன்றே நலமிக்க
நல்லார் சொற் கேட்ப துவுநன்றே—நல்லார்
குணங்க ளுரைப்பதுவு நன்றே அவரோடு
இணங்கி யிருப்பதுவு நன்று."—மூதுரை.

"ஒழுக்கம் விழுப்பந் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"—திருக்குறள்.

இவ்வுலகத்து மனிதப் பிறப்பெடுத்த ஒவ்வொருவனுக்கும் நற்குணம் இன்றியமையாதது. அது மனிதனுக்குச் சிறப்பை விளைத்தலால், அதனை அவன் தன்னுயிரினும் அதிகமாகப் பாராட்ட வேண்டுமென்று மேற்காட்டிய திருக்குறள் வற்புறுத்துகின்றது. இப்படிப்பட்ட நற்குணம் மக்கட்கூட்டத்தில் மலிந்து பரவுதல் அவசியமென்பது வெளிப்படை. அங்ஙனம் அது எங்கும் பரவி, ஜன சமூகத்துக்குப் பெரியதோர் நன்மையைப் பயக்க வேண்டுமானால், அதனைப் பயிலும் வழியினைக்குறித்து நாம் சிறிது இங்கு எடுத்துக் கூறுதல் பொருத்தமுடையதேயாகும். இவ்விஷயத்தைப் பற்றிப் பலவிடத்தும் பல சான்றோர்கள் கூறியுள்ளவற்றைச் சாதனமாகக் கொண்டு அவற்றுள் சிலவற்றை இங்கு விரிக்கின்றேம்.

"நற்குணப் பயிற்சி" என்னும் விஷயம் தொடக்கத்துத்தானே பின் வருமாறு மூன்று பெரும் பிரிவுகளாக வகுத்தற்குரியதாயுள்ளது; அவையாவன:—

(I) குழந்தைகள், இளமைதொட்டே பள்ளிக்கூடத்துக்கு அனுப்பப்படும் வரை நற்குணங்களிற் பயிலுதல்.

(II) பாடசாலைகளில் மாணவகர்கள் நற்குணப் பயிற்சியைப் பெறுதல்.

(III) கல்வி கற்று முடிந்தபின்னர் உலக வாழ்க்கையுட்பட்டவர்கள் நற்குண நற்செய்கை யுடையராய் விளங்கல்—என்பன.

இனி, இப்பெரும் பிரிவுகளில் ஒவ்வொன்றினைக் குறித்தும் சிறிது விரித்துரைப்போம்.

இந்நில வுலகத்தில் படிப்பெங்கும் பரவுதலாலும், நல்லரசினாலும், இவைபோன்ற பிற காரணங்களாலும், இக்காலத்து ஜனங்களிடத்தில் நாகரீகம் சிறிது சிறிதாக அதிகப்பட்டு வருகிறது எனினும், "கட்டின வீட்டிற்கே குறை சொல்லுவது வழக்க"மாவது போல, நாகரீகக் குறைவுள்ள சாதாரணஜனங்கள் * "நெஞ்சத்தவலமிலர்" ஆதலின், "நன்றறிவாரில் திருவுடைய"ராகி ஏக்கமற்றுத் திரியா நிற்க, மனிதவர்க்கத்தின் நன்மையை நாடிப்பலவாறு உழைத்து வரும் நாகரீக மிகுந்த அறிவாளர்களே அம் மனிதவர்க்கத்திலமைந்துள்ள குறைகளைக் கண்டு உணர்ந்துகொண்டிருக்கின்றனர். இவர் போன்றவர்க்குத் தம்மைப்போல் பிறரை நினைத்தல் வேண்டுமென்பதும், தம்முடைய பெருமையைப் பாராட்டிக் கூறி மகிழ்வதில் தமது சிறுமையினை நீக்க முயல்வதை மறந்து விடுவது உசிதமன்றென்பதும் அனுஷ்டான விதியாகும். இத்தகைப் பெரியோர்கள் மிகப் பலராகி விளங்குவாராக. இது நிற்க.

நன்றாய்த் துவைக்கப்பட்டு மென்மை வாய்ந்திருக்கும் மண்ணினால், எவ்வாறு பின்னர் எவ்வித உருவமும் இயற்றுதற் கெளிதாகின்றதோ, அவ்வாறே சிறு குழந்தைகள் தம் சுற்றுப்புறத்துள்ள ஸௌகரியங்களால் நன்கு திருத்தப்பட்டுவந்தால், அவர்களால் பின்னர் உலகத்திற்குப் பெரிய நன்மைகள் விளைகின்றன.

பள்ளிக்கூடத்திற்குப் போகும் பருவத்திற்கு முன் குழந்தைகள் தம் பெற்றோரிடத்து மிக்க பற்றும் நம்பிக்கையும் வைத்திருக்கிறார்கள். பெற்றோர்கட்கெல்லாம் தங்கள் பிள்ளைகளிடத்தில் பிரியமுண்டென்று நாம் கூற வேண்டிய தவசியமில்லை. ஆனால் அப்பிள்ளைகளை எவ்வாறு வளர்த்து வருவது தமக்கும் அவர்களுக்கும் பிற்காலத்தில் பெரிதும் பயன்படுமென்பதைப் பெற்றோர்களிற் பலர் நன்கு அறிந்திலர். குழந்தைகளை வளர்த்தல் எளிதான ஒருவிஷயமன்று. உள நூற்புலமை வாய்ந்துள்ள பண்டிதர் (Psychologists) எல்லாரும் அது மிகவும் அருமையும் மேன்மையும் அமைந்தகாரியமென்று ஒருங்கே கூறுகின்றனர்.

---

* "நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர்"—திருக்குறள்.

[மனதிற் கவலையில்லாதவ ராதலால் மூடர்கள் படித்தவர்களில் மேம்பட்டவர் ஆவர் என்பது கருத்து. இது வஞ்சப் புகழ்ச்சி.]

இவ்வாறு அருமையானதும் அவசியமானதும் ஆகிய இவ்விஷயத்தில் நாம் மிக்க குறைபாடு உடையராயிருக்கின்றோம். நம் நாட்டுள்ள குறைகளை நாமுணர்ந்து அவற்றை நீக்க முயலுவதில் ஒருவித கௌரவக் குறைவுமில்லை; உற்று நோக்கில், அங்ஙனம் செய்வதனால் நமக்கு கௌரவ நிறைவே விளையும். பொதுவாகப் பெற்றோர்கள் தமக்குக் குற்றமெனத் தோன்றுவனவற்றை யெல்லாம் சிறுவர் மேலேற்றித் தாம் செய்வதெல்லாம் சரியென நினைக்கின்றார்கள். அப்படிக் கருதுவது சாதாரண மனிதர்களின் இயல்பே எனினும் குழந்தைகளோடு பழகும்போது, பெரியோர்கள் குழந்தைகளின் செயலில் "இது குற்றமா, குற்றமன்று, குற்றமாயின் இதனை மறுமுறை நமதருமைக் குழந்தைகள் செய்யாதிருப்பதற்கு நாம் யாது செய்ய வேண்டும்?" என்று நிதானமாக யோசித்து ஒருவித முடிவு செய்ய வேண்டும்; அங்ஙனமின்றிக் குற்றமொன்று கண்டவுடனே (அது உண்மையிற் குற்றமில்லாது போயினும் போகலாம்) கோபங்கொண்டு சிறுவர்களைச் சிக்ஷிப்பது முறையன்று. இங்ஙனம் செய்வதே ஜனங்களுக்குள் பெரு வழக்கமாயிருப்பதால் இதனை மறுத்துரைத்ததுமன்றி அங்ஙனம் மறுப்பதற்கு உதாரணமும் கூறிவிளக்குவோம்.

இயல்பாகவே சுறுசுறுப்பும், பல்லாற்றானும் விஷயங்களை யுணர்ந்துகொள்ளும் சுபாவமுமுடைய ஒரு சிறு குழந்தையை "இதைத்தொடாதே, அதைத்தொடாதே, அங்கே போகாதே, இங்கு வராதே" என்று கட்டளையிடுவதும், அக்கட்டளையை மீறினால் அதற்காகக் குழந்தைகளைக் கண்டிப்பதும் செய்யத் தகுந்தவையல்ல. உத்ஸாஹத்தாலும் விளையாட்டாலும் குழந்தைகளுக்குணர்த்தும் விஷயம், சிக்ஷையால் உணர்த்துவதைக் காட்டிலும் பன்மடங்கு சிறப்புள்ளதென்பதை நாமெல்லோரும் நன்கறிதல் வேண்டும். இப்படிக் குழந்தைகளைச் சிறு பிராயத்திலேயே நல்வழிக்குக் கொண்டுவரவேண்டும். "தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்" என்பது பழமொழி யன்றோ? குழந்தைகள் தம் பெற்றோர், முன்னோர், முதலியோரது குணங்களைப் பங்கிட்டுக் கொண்டே பிறக்கிறபடியால் நற் பழக்கத்தாலேயே அவர்களை முற்றிலும் திருத்திவிடலாமென்பது முழுவதும் உண்மையான ஒரு கொள்கை

யன்று. ஆயினும் சிறந்ததோர் பதவியை உத்தேசத்தில் வைத்துக் கொண்டு அதற்குத்தக்கவாறு சிறுவர்களின் உள்ளத்தை நல்வழியில் திருப்ப முயல்வது மிக்க நன்மை விளைவிக்குமென்பதில் சிறிதும் ஐயமேயில்லை.

தாய்மாரிடமிருந்து குழந்தைகள் அறிந்துகொள்ளக்கூடிய பண்புகள் பல. அத் தாயார்கள் கல்விகற்று உண்மையறிவுடைய உத்தம மாதர்களாயிருப்பின், அவர்களால் சிறுவர்கள் அடையும் பயன் அளவற்றது. இதுபற்றியன்றோ ஒரு பெரியவர் "ஒரு ஆடவனுக்கு கல்வி பயிற்றினால் ஒருவன் கற்றவனாகிறான். ஒரு பெண் மணியானவள் கற்றுணர்ந்து விளங்குவளேல், ஒரு குடும்பமுழுவதும் அதன் பயனை யடைகிறது. குடும்ப மட்டுமா? அவள் மூலமாக மக்கட்கூட்டமனைத்தும் நன்மை யுறுகின்றது" என்று மிக அழகாகக் கூறியிருக்கிறார். நாமும் நம் சிறுவர்கள் நற்குண சம்பன்னராய் நாளும்அபிவிருத்தியடைய விரும்புவோமாயின், மேற்குறித்த வாக்கியத்துள் பொதிந்துள்ள நுண் பொருளை யுணர்ந்து நமது பெண்களுக்கும் கல்வி பயிற்றுதல் வேண்டும்.

பள்ளிக்கூடத்துக்குச் செல்லத் தொடங்கியதுமுதல் உயர்தரக் கலாசாலையிற் படிப்பு முடியும்வரை மாணாக்கர்களுக்கு உபாத்தியாயர்களாலும் ஒரு சாலை மாணவர்களாலும் நற்குணம் வளர்தல் கூடும். அன்றியும் அவர்கள் தமது முயற்சியினால், மனத்தை அப் போதப்போது நல்வழியில் திருப்பிக்கொள்ளுதலும் வேண்டும். பிள்ளைகளுக் காசிரியராக , இருப்பவர்கள் அவர்களுக்கு அறிவு வளர்தற்குவேண்டியவற்றைமாத்திரம்போதித்தல் போதாததாகும். ஒழுக்கம் ஓங்கி வளர்தற்காவனவற்றையும் அவர்கள் பிள்ளைகளுக்குப் பலகாலும் பகர்தல் வேண்டும். அன்றியும் "சொல்லுதல் யார்க்கு மெளிய அரியவாம் சொல்லிய வண்ணம்செயல்."

என்று தெய்வப்புலவர் திருவாய் மலர்ந்ததைத் தம் கருத்தி லிருத்தி, ஆசிரியராவார் சொன்மாத்திரையில் நில்லாது, தாமும் சொல்லியவண்ணமே ஒழுகித் தமது மாணாக்கர்களுக்கு நற்குணத்துக்கு வழிகாட்டிகளாயிருத்தல் வேண்டும்.

மாணாக்கர்களோடு தம்மாலியலுமளவு உபாத்தியாயர்கள் நெருங்கிப்பழகவேண்டும். தமது மாணாக்கர்களுக்கு நல்ல புஸ்தகங்க

ளைத் தாமே எடுத்துப் படிப்பதில் அவாவுண்டாகும்படி அவர்கள் தூண்டவேண்டும். இவ்வாறு பொதுவாகப் படிப்பினிடத்து ஆவல் கொண்ட மாணவர்கள் பற்பலதேச சரித்திரங்களையும் பெரியோர் சரித்திரங்களையும் படித்துப் படித்து அவற்றிலிருந்து

“..............அறம் வெல்லும் பாவம் தோற்கும் என்னு மீதியம்பவேண்டுந் தகையதோ...” * என்னும் உண்மையை உறுதியினுணர்ந்துகொண்டு நல்வழிப்படுவர். புஸ்தகங்கள் மலிந்து நிறைந்து வழங்கு மிக்காலத்தில், மாணாக்கர்களுக்கு அவற்றின்மீது ஆசையை மாத்திரம் ஆசிரியர் தக்கவாறு வளர்த்துவிட்டால் அவர்கள் அரிய பெரிய புஸ்தகங்களில் அமைந்துள்ள பேராசிரியர்களது கருத்துக்களில் ஈடுபட்டும், அவற்றைப்பற்றி ஐயப்பாடு நிகழும்போது பல நண்பர்களுடன் கலந்து அளவளாவியும் தம்மை நாளடைவில் மேன்மக்களாக்கிக் கொள்ள அது சிறந்த ஒரு கருவியாகும்.

இவ்வாறு திருந்திய கல்வியைப் பெற்றுள்ள மாணவர்கள் பின்னர்த் தங்கள் தங்கள் தொழிலில் அமர்ந்து தம் வாணாளைக் கழிக்கும்போது அவர்கள் “கசடறக்” கற்றதன்பயனாகக் கற்றபின் அதற்குத் தகவே ஒழுகிநிற்பார்கள். கல்வி நலம் மிக்கானொருவன் நற்குணமில்லாதிருப்பின் அப் பேதையைப்போலப் பேதையர் இவ்வுலகில் யாருமில்லை என்பது திருவள்ளுவநாயனார் கருத்தாகும்.

அவனுடைய அறிவால் உலகத்துக்கு விளையும் நன்மையினும் குணக்கேட்டால் வரும் தீமையே அதிகமாகும். கல்வியறிவு மிகுந்திராத ஒருவன் நற்குணமுடையனாக விருப்பின் அவனால் ஜனசமூகத்துக்குப் பல நன்மைகள் உண்டாகும். இன்னுமொன்று இங்கு கவனிக்கத்தக்கது.

கல்வியறிவினை இயற்கையிலேயே சூக்ஷ்மபுத்தி யுடையவன்தான் எளிதிற் பெறலாகும்; நற்குணமோ யாவராலும் பயிலுதற்குரியது. நற்குணமில்லாத மனிதர் தலையினின்றும் சிரைத்துக் கீழ் வீழ்த்தப்பட்ட மயிர் போல்வரென்று தமிழ்வேதம் முழங்குகின்றது. கூந்தலுக்குத் தலையினிற் சேர்ந்திருக்கும்போதே பேரழகும் பிறர்மனமும் கவரும் இயல்பும் அமைந்துள. அன்றித் தலையி

* கம்பராமாயணம், சுந்தரகாண்டம், இலங்கைமாதேவி வதைப் படலம்.

னின்றும் அது தரையில் விழுந்துவிடின் அதனை நாம்மிகவும் இழிந்த ஒரு பொருளாகவன்றோ மதிக்கின்றோம்? அவ்வணமே, நற்குணத் தோடுகூடிய ஒருவனுக்கே பிறரால் மதிப்பும் மரியாதையும் உண்டு; அவன் நன்னெறியிலகிப் புன்னெறிபோவனேல் அவனை அனைவரும் இகழ்வரென்பது உலகத்தின் பிரத்தியக்ஷ அநுபவ உண்மைகளில் ஒன்று.

நற்குணங்களெல்லாம் தொடங்குங்கால் துன்பம்போல்தோன்றி இறுதியில் இன்பம் பயக்கும்" தீக்குணங்களோ தொடங்குங்கால் சுலபமாய்த் தோன்றிப் பின்னர்ப் பெருந்துன்பத்தை விளைவிக்கும். நற்குணத்தால் 'சாதுக்கள் கூட்டுறவாகிய மஹாதுறக்கம்' இப்பிறப்பிலேயே கிடைக்கும்; தீக்குணமோ இம்மையிலேயே பேதையர்கள் கூட்டுறவாகிய பெருநரகிற் சேர்ப்பிக்கும். ஆதலின் மனித வர்க்கத்திற் பிறந்த யாவராலும், எக்காலத்தும், எவ்விடத்தும், எந்நிலையிலும் போற்றப்படுவதும், போற்றற்குரியதும், போற்றிற் பெரும் பயன் விளைப்பதும் நல்லொழுக்கமேயன்றிப் பிறிதில்லை. அறிவுடையோர் பாராட்டும் கல்வியறிவும் அதற்கு அடுத்தபடியாகுமேயன்றி அதனினும் உயர்ந்ததெனக் கொள்ள இயலாதெனின் ஒழுக்கத்தின் விழுப்பத்தைப்பற்றி இனி உரைப்பதென்னே?

பொங்குநீர்க் கடல்சூழ் தந்த புவிமிசை நிறையு மாந்தர்
தங்களுட் பிறப்பாற் போறற் சமயபே தத்தால் மற்றும்
இங்கிவை போல்ப வற்றல் எத்துணை முரண்பட் டாலும்
எங்குநற் குணத்தின் மாண்பை யிசைப்பதி லொருப்பட் டாரே.

வே. முத்துஸ்வாமி ஐயர். எம். ஏ. எல். டீ.

சமாசாரக் கொத்து.

மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்து 12-ம் வருஷ பூர்த்திக் கொண்டாட்டம்:—11—10—13 மாலை 5-30க்கு சேதுபதி ஐஸ்கூலில் சபை கூடியது. சுமார் 400 மாணவர்களும் 100 பெரியவர்களும் கூடியிருந்தார்கள். சங்கத்தார் விரும்பியவாறு மகிபாலன்பட்டி வித்துவான் ஸ்ரீமத் மு. கதிரேசச்செட்டியாரவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். கடவுள் வாழ்த்து முடிந்த பின் மு. ரா. கந்தசாமிக் கவிராயரவர்களால் அக்கிராசனாதிபதியவர்கட்கு வந்தனோபசாரப் பத்திரம் வாசிக்கப் பெற்றது. அக்கிராசனாதிபதியவர்கள் முகவுரையாகச் சில கூறியபின் சங்கத்தின் 12-ம் வருஷ அறிக்கைப்பத்திரம் படிக்கப்பெற்றது. தூத்துக்குடியிலிருந்து வந்திருந்த திருவாவடுதுறை ஆதீனச்சைவப்பிரசாரகர் ஸ்ரீமத் பொ. முத்தையபிள்ளையவர்கள் ஒழுக்கம் என்ற விஷயத்தைப்பற்றி மிகவும் இனிமையாக உபந்யசித்தார்கள். கிருபணனும் மகனும் என்ற ஓர் பிரஹசநம் மாணவர்கள் சம்பாஷணை விநோதத்தை விளைத்தது. இச்சங்கத்தாரால் நடத்தப்பட்ட தமிழ்ப் பரீக்ஷையிற்றேறிய மாணவர்கட்குப் பரிசும் யோக்கியதா பத்திரமும் கொடுக்கப்பட்டன. முடிவில் அக்கிராசனாதிபதியவர்கள் இச்சங்கத்தின் அபிவிருத்தியைப்பற்றியும் பொ மு. பிள்ளையவர்களின் உபந்யாசத்தைப்பற்றியும் இச்சங்கத்தின் நிரந்தர அக்கிராசனாதிபதியாகிய ஸ்ரீமத் ம. கோபாலகிருஷ்ணையரவர்களின் விடாமுயற்சி தமிழபிமானமாகிய சுகுண விசேடங்களைப் பற்றியும் மாணாக்கர்களின் அன்புடைமையைப் பற்றியும் சங்கத்தால் விளையும் நன்மைகளைப் பற்றியும் வியந்து பாராட்டிப்பேசிமுடித்தார்கள். கடவுள் வாழ்த்துக் கூறப்பெற்றதும் சபா நாயகரவர்கட்குப் பூமாலை சூட்டிச் சபையோர்க்குச் சந்தன தாம்பூலாதி வழங்கப் பெற்றன. ஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணையரவர்கள் அக்கிராசனாதிபதியவர்கட்கும் சபையோர்க்கும் நன்றிகூறி உபசரித்தார்கள். இறைவனருளால் நன்கு நிறைவேறியது.

மறுதினமாகிய 12 உ மாலை 5 மணிக்கு மறுபடியும் சபைகூடியது. கடவுள் வாழ்த்து கூறப்பெற்றதும் சபையார் விருப்பப்படி ஸ்ரீ மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள் அக்கிராசனம் வகித்து முன்னுரையாகச் சில கூறியபின் வலயபுரிப்போதகாசிரியர்நெடுவை

வித்துவான் ஸ்ரீ இராமசாமியய்யங்காரவர்கள் சகோதரர் கடமை என்பதைப்பற்றியும், மதுரை செயிண்ட் மேரி கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீ மு. கோவிந்தசாமியய்யரவர்கள் சிறுவர் கடமை என்பதைப்பற்றியும், மகிபாலன்பட்டி வித்துவான் ஸ்ரீ மு. கதிரேசச் செட்டியாரவர்கள் புலமை மாட்சி என்பதைப்பற்றியும் உபந்யசித்தனர். உபந்யாசங்கள் மிகவும் இனிமையும் பொருளமைதியும் பெற்றுச் சிறந்து விளங்கின. அக்கிராசனாதிபதியவர்கள் உபந்யாசங்களின் சிறப்பைப் பாராட்டி வியந்து பேசி முடிவுரை கூறினார்கள். சபாநாயகரவர்கட்கும் உபந்யாசகர்கட்கும் பூமாலை புனைந்து சந்தன தாம்பூலாதி வழங்கி நன்றிகூறிக் கடவுள் வாழ்த்துக்கூறி முடிவு செய்யப்பெற்றது.

* * * * *

தேவகோட்டை வைசிய சிவாநந்தசபை உபந்நியாசங்கள்.

16—10—13 மாலை 5-மணிக்கு தேவகோட்டை சிதம்பனி மெ லெ. மெ. பங்களாவில் அமைக்கப்பெற்ற வைசிய சிவாநந்த சபைக் கொட்டகையில் சிவநேயச் செல்வர்களாகிய நாட்டுக்கோட்டை நகரத்தார்களும் பிறரும் சுமார் 300-பேர் கூடினார்கள். கடவுள் வாழ்த்து ஓதப்பெற்றது.

சபையார் விருப்பப்படி ஸ்ரீ மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள் அக்கிராசனம் வகித்து முன்னுரைகூறி கற்பு என்ற விஷயத்தைப் பற்றி உபந்யசித்தார்கள். பின்னர் மகிபாலன்பட்டி வித்துவான் ஸ்ரீமத் மு. கதிரேசச் செட்டியாரவர்கள் சிவலிங்க வழிபாடு என்பதைப்பற்றி மிக இனிமையாக வடமொழி தென்மொழி நூற்பிரமாணங்களுடன் நன்கு உபந்யசித்தார்கள். அநந்தரம் தேவகோட்டை வித்துவான் ஸ்ரீமத். சொ. வேலுச்சாமிக் கவிராயரவர்கள் கல்வி என்ற விஷயத்தைப்பற்றி நன்றாக உபந்யசித்தார்கள். பின் தேவகோட்டை வைசியமித்திரன் உதவிப்பத்திராதிபர் ஸ்ரீமத். நாகை. கோபாலகிருஷ்ண பிள்ளையவர்கள் ஆன்மஇலக்கணம் என்பதைப் பற்றி நன்கு உபந்யசித்தார்கள். முடிவில் அக்கிராசனாதிபதியவர்கள் உபந்யாசங்களின் சாரங்களை எடுத்துக் கூறி உபந்யாசகர்கள் கல்வித் திறமையாதிகளை வியந்துபேசி முடித்தார்கள். கடவுள் வாழ்த்துக் கூறப்பெற்றது. இரவு 8—30-க்கு மங்களமாக நிறைவேறியது.